Indian Vedic School
Language of the Gods

# FAMOUS MORAL STORIES

BY INDIAN VEDIC SCHOOL

TAMIL VOL - 16


















# INDEX


| | |
|---|---|
| STATUE | 1-9 |
| TEST OF HARD WORK | 10-17 |
| TRUE DETECTIVE | 18-24 |
| TRUE MEANING | 25-30 |
| LITTLE VALU | 31-38 |
| MOON'S EFFECT | 39-44 |


சிலை


முன்பொரு காலத்தில் தர்மபூர் என்ற நகரம் அபோபிஸ் என்ற மன்னரால் ஆளப்பட்டது. அவருக்கு அடேன் என்று ஒரு மகன் இருந்தான்.
அரசர் தன்னுடைய மந்திரியிடம் உரையாடிக் கொண்டிருந்தார்.
மந்திரி, நான் இளவரசர் அடேன் திருமணம் செய்து கொள்ள இது சரியான வயது என்று நினைக்கிறன். ஆனால் அவனோ ஈடுபாடே காட்டவில்லை
அரசர் நிறைய சிற்பிகளை வர வைக்கிறார்.
நீங்கள் நம் நாட்டில் உள்ள அனைத்து அழகான பெண்களை கண்டு பிடித்து சிலை செய்து வாருங்கள்.
என் மகன் இந்த சிற்பங்களை பார்த்து அதில் ஒன்றை திருமணத்திற்கு தேர்வு செய்ய வேண்டுமென நினைக்கிறன்.


சிற்பிகள் பிரயாணத்தை ஆரம்பித்தார்கள்.
நீ அரசியாக வேண்டுமென்றால் உன் சிற்பத்தை செய்ய எனக்கு அனுமதி கொடு.
ஆறு மாதத்திற்குள் நூறுக்கும் மேற்பட்ட சிலைகள் சேர்கின்றன.
அரசர் இந்த சிலைகளை மாளிகையில் அமைத்தார்.
போய் இளவரசர் அடேனை அழைத்து வா.
இளவரசர் அடேன் அனைத்து சிற்பங்களையும் பார்த்து ஒன்றை தேர்ந்தேடுத்தார்.
மந்திரியே, இவள் யாரென்று கண்டு பிடி?
அரசே, இவள் கிசாவில் உள்ள ஒரு வியாபாரியின் மகள். சிற்பி ஆலீமிர்க்கு அவளை பற்றி தெரியும்.


அரசர் அந்த வியாபாரிக்கும், அவர் மகள் ஷோஷனுக்கும் சிதி அனுப்பினார்.
அவள் மாளிகைக்கு வந்தவுடன் அழ ஆரம்பித்தாள்.
அவளுக்கு என்ன ஆயிற்று? பைத்தியமா?
இல்லை அரசே.
எனக்கு சந்தேகமாக இருக்கிறது. அவள் திருமணத்திற்கு பொருத்தமானவள் அல்ல.
ஒரு நாள் ஒரு விவசாயி அரசவைக்கு வந்தார்.
அரசே. எனக்கு நியாயம் தேவை. எனக்கு ஒரு மகள். ஒரு நாள் சிற்பி ஒருவர் வந்து எனது மகளுக்கு அரசியாவாள் என்று நம்பிக்கை அளித்து சிலை செய்தார்.


அவள் சாதாரண மனிதனை மணக்க தயாராக இல்லை. தயவு செய்து அவளை உங்கள் மருமகளாக்கி கொள்ளுங்கள் இல்லையேல் அவளை வேறு யாரையாவது மணந்து கொள்ள சம்மதிக்கவையுங்கள்.
ஓ.. இது எல்லாம் தந்தையின் திட்டமா? இந்த சிலைகள் எல்லாம் நிஜ பெண்களை பார்த்து செய்ததா?
இளவரசர் அடேன் அந்த விவசாயிக்கு நிறைய பணம் கொடுத்து அனுப்பி வைத்தார்.
தந்தையே, நான் ஷோஷனை மணக்க விரும்புகிறேன்.
மகனே அவள் பைத்தியம்.
நிச்சயமாக இல்லை. சிற்பி ஒரு பைத்தியத்தை எப்படி அவர் சிலை செதுக்கும் வரை அமைதியாக உட்கார வைக்க முடியும்?
மகனே. நீ சொல்வது சரி தான்.



அரசர் ஷோஷன் சிற்பி ஆலீமை விரும்புவதால் இளவரசை தவிர்க்கத் தான் அப்படி நடித்தாள் என்று தெரிந்து கொள்கிறார்.
போய் ஷோஷனை அழைத்து வாருங்கள்.
வீரர்கள் ஆலீமின் வீட்டிற்கு சென்றார்கள்.
ஷோஷன் எங்கே?
வீரர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. அவர்கள் மாளிகைக்கு திரும்ப சென்று நடந்ததை பற்றி அரசரிடம் சொல்கிறார்கள்.
நானே சென்று பார்க்கிறேன்
அரசரும் தோற்றுவிடுகிறார்..
ஏன் இவ்வளவு சிற்பங்கள் செய்தாய்?
அரசே, நான் எப்போது சிற்பம் செய்ய ஆரம்பித்தாலும்,அவள் நினைவு வருகிறது அதனால் அவளின் சிற்பமே செய்து விடுகிறேன்.


அரசர் ஷோஷன் ஆலீம் இருவரும் மற்றொருவரை மிக விரும்புகிறார்கள் என்று அறிந்து கொள்கிறார். மேலும் ஆலிமுக்கு அரசரை ஏமாற்றும் எண்ணமிருந்தால் ஷோஷனை அரசவைக்கு கொண்டுவந்திருக்க மாட்டார் என்றும் புரிந்து கொள்கிறார்.
அவர்களை பிரிப்பது சரி அல்ல, ஆனால்..
ஆலீம், எனது மகனும் ஷோஷனை மணக்க விரும்புகிறான். அதனால் உங்கள் இருவருக்கும் நான் ஒரு போட்டி வைக்கிறேன். யார் உண்மையான பெண்ணை கண்டுபிடிக்கிறார்கள் என்று.
அரசர் தன்னுடன் அனைத்து சிற்பங்களையும் மாளிகைக்கு கொண்டு சென்று சோதனைக்காக மாற்றி அமைத்து வைத்தார்.
ம்ம்ம்ம்..
மன்னித்துவிடுங்கள் அரசே. எல்லாம் ஒன்று போல் இருப்பதால் என்னால் கண்டு பிடிக்க முடியவில்லை.


கடைசியிலிருந்து எட்டாவது அவள் தான்.
ஓ.. நீ சொன்னது சரி மகனே.
போய் அவளுக்கு மாலையிடு.
மன்னித்து விடுங்கள் தந்தையே, என்னால் முடியாது.
அரசர் அதிர்ச்சியுற்றார்
ஆலீம் ஷோஷனை தேடும் பொழுது, அவள் அவரை அன்புடன் பார்த்து கொண்டிருந்தாள். மற்ற சிற்பங்களெல்லாம் ஒரே மாதிரி இருந்தது.
நான் சிற்பங்களை பார்க்கும் பொழுது, ஒரு சிற்பம் சோகமாகவும் வருத்தத்துடனும் இருந்தது. அதனால் என்னால் கண்டுபிடிக்க முடிந்தது.


அதனால் அவளை நான் மணப்பது முறையல்ல. ஆலீம் தான் மணக்க வேண்டும்.
என்ன ஒரு கவனிப்பு. உன்னை நினைத்து நான் பெருமை படுகிறேன்.
மகனே, உன்னிடம் அரசராக அத்தனை தகுதிகளும் உள்ளன. அரசர் எப்போதும் உண்மையாகவும் பெருந்தன்மையுடன் நடந்து கொள்ள வேண்டும்.
அரசர் ஆலீமுக்கும் ஷோஷனுக்கும் திருமணம் செய்து வைத்தார்.
முற்றும்

# கடின உழைப்பின் சுவை




பீட்டர் ஒரு ஏழை அனாதை. அவன் கல்கோன் கிராமத்தில் இருக்கும் மக்களுக்கு சிறு சிறு வேலைகள் செய்து வாழ்க்கை நடத்தினான்.
பீட்டர் ஏழையாக இருந்தாலும் கடினமாக உழைத்து நேர்மையாக இருந்தான். அவனுடைய இந்த நல்ல குணம் அவனை சுற்றி இருந்த அனைவருக்கும் பிடித்திருந்தது.
காலம் செல்ல செல்ல கல்கோனில் கடும் வறட்சி ஏற்பட்டது, கிராமத்து மக்கள் அனைவரும் கிராமத்தை விட்டு சென்றனர்.
பெரும்பாலான மக்கள் கிராமத்தை விட்டு சென்றுவிட்டனர். இப்போது எனக்கு இங்கு வாழ்க்கை நடத்த வழிே இல்லை. நான் பிட்ச்விள்ளே நகரம் செல்வது தான் உகந்தது. அங்கு என்னால் நல்ல வாழ்க்கை அமைத்து கொள்ள முடியும்.


அடுத்த நாள், பீட்டர் தனது உடைமைகளை எடுத்து கொண்டு பிட்ச்விள்ளே சென்று விட்டான்.
பிட்ச்விள்ளே அடைந்தவுடன், பீட்டர் வேலை தேடி சந்தைக்கு சென்றான்.
ஓ. எவ்வளவு பெரிய சந்தை இது. இங்கு வேலை கிடைப்பது சுலபமாக இருக்கும் என நினைக்கிறேன்.
அவன் ஒரு பழ வியாபாரியை அணுகினான்.
வணக்கம் ஐயா. என் பெயர் பீட்டர். நான் கல்கோன்கிராமத்தில் இருந்து வேலை தேடி வந்திருக்கிறேன். நான் நீங்கள் எந்த வேலை கொடுத்தாலும் செய்வேன்.
மன்னித்துவிடு மகனே, என்னிடம் எந்த வேலையும் இல்லை.
நாள் முழுவதும் பீட்டர் சந்தையில் வேலை தேடி அலைந்தான்.


இருட்டிவிட்டது. எனக்கு ஒரு வேலையும் கிடைக்கவில்லை. இன்று நான் பட்டினி தான் போல இருக்கிறது.
சோர்வடைந்து அவன் நடந்து கொண்டிருந்தான். திடீரென..
ஒ ஒ
ஜாக்கிரதை இளைஞனே, நீ மிகவும் களைப்பாக இருக்கிறாய். என்ன நடந்தது?
நன்றி ஐயா, நான் காலையிலிருந்து எதுவும் சாப்பிடவில்லை.


கவலை படாதே. நான் உன்னை என் வீட்டிற்க்கு கூட்டி செல்கிறேன். உனக்கு ஏதாவது உண்ண கொடுக்கிறேன்.
ஆனால், என்னிடம் பணம் ஏதும் இல்லை.
பரவாயில்லை. நான் தாராளமனமுடையவன். நீ எனக்கு எதுவும் தர வேண்டாம்.
மன்னித்துவிடுங்கள் ஐயா, நான் பிச்சை ஏற்பதில்லை.
உன்னை மாதிரி நான் இதுவரை யாரையும் பார்க்கவில்லை. சரி. நான் தரும் உணவிற்கு பதிலாக நீ என் வீட்டுவேலை களுக்கு உதவியாக இரு.
நன்றி ஐயா. நான் சந்தோஷமாக ஏற்று கொள்கிறேன்.
நல்லது. நான்அயான். உன் பெயர் என்ன?
பீட்டர் ஐயா.


பீட்டர் அயானுடன் சென்று வீட்டு வேலைகளில் உதவியாக இருந்தான்.
ஒரு நாள் பீட்டர் அயானுக்கு தேநீர் கொடுத்துக் கொண்டிருந்தான்.
நான் உனக்கு இலவச உணவு அளித்தபோது நீ ஏன் மறுத்தாய் என்று எனக்கு புரியவில்லை பீட்டர்.
ஐயா, தாங்கள் பணக்காரராகவே பிறந்து வளர்ந்ததினால் உங்களுக்கு புரியாது.
அப்படியா? நீ ஏன் எனக்கு விளக்க முயற்சிக்க கூடாது?
சரி ஐயா. நீங்கள் விருப்பபட்டால். ஆனால் நாளை நான் சொல்வதை நீங்கள் கேட்க வேண்டும்.
சரி.
மறு நாள் காலை.
நான் என்ன செய்ய வேண்டும் சொல்.
இன்று நாள் முழுதும் என்னுடன் வேலை செய்யுங்கள். முதலில் இந்த வீட்டை சுத்தம் செய்வோம்.



நாள் முழுவதும் அயான் பீட்டருடன் வேலை செய்தான்.
கடவுளே. இனிமேல் முடியாது. காலை முதல் நான் எதுவும் சாப்பிடவில்லை மேலும் நாள் முழுவதும் வேலை செய்திருக்கிறேன்.
ஐயா, இங்கே ஆப்பிள் சாப்பிடுங்கள்.
நன்றி.


இது தான் நான் சாப்பிடும் சுவையான ஆப்பிள். நான் இது வரை சாப்பிட்டதை விட இது மிகவும் சுவையாக இருக்கிறது.
சொல்லு பீட்டர். இந்த ஆப்பிளை நீ எங்கு வாங்கி வந்தாய்?
இது சாதாரண ஆப்பிள் தான். கடையில் தான் வாங்கினேன்.
பிறகு, இது எப்படி இவ்வளவு சுவையாக இருக்கிறது?
சுவை ஆப்பிள் அல்ல .உங்கள் கடின உழைப்பு.
என்ன? கடின உழைப்பின் சுவையா? புரியவில்லையே.
கடின உழைப்பின் மூலம் ஏதாவது கிடைத்தால், அது சாதாரணமாக இருந்தாலும் தனிச்சிறப்புடையதாக மாறிவிடும்.
அயானுக்கு பீட்டர் சொல்வது புரிந்தது.
நீ சொல்வது சரி தான் பீட்டர். நீ இன்று எனக்கு ஒரு மதிப்புள்ள பாடத்தை புகட்டினாய். இன்றிலிருந்து நீ என்னுடைய வியாபார வேலைகளை கவனித்து கொள்.
நன்றி ஐயா, நான் கௌரவிக்கப்பட்டேன்.
கடைசியில் பீட்டர் கடின உழைப்பினால் நல்ல வாழ்க்கையை சம்பாதித்தான்.
முடிவு.


உண்மைதுப்பறிவாளர்


ருடோல்ப் ஒரு துப்பறியும் நிறுவனம் வைத்திருந்தார். மைக்கல் அவருடைய மேலாளர்.
மைக்கல் எப்போதும் தனது நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கு தான் வேலை அளிப்பார்.
ருடோல்ப் மைக்கல் எப்படி தனது உறவினர்களுக்கு வேலை கிடைக்க உதவுகிறார் என்று கவனித்தார்.
நிச்சயமாக நான் ஒரு நாள் அவனுக்கு பாடம் புகட்டுவேன்.
ஒரு நாள் துரதிர்ஷ்டவசமாக அவருடைய தலைமை துப்பறிவாளர் ஜான் இறந்து போனார்.
நாம் ஜானின் இடத்திற்கு ஒரு திறமையான மனிதரை நியமிக்க வேண்டும்.


அரசே, நமது துப்பறிவாளர்களில் சாமர்த்தியசாலியை நாம் தலைவராக நியமிக்க வேண்டும்.
ரால்ப் பிலிப் என்று முன்னால் தலைவர் ஜானிடம் இரண்டு நெருக்கமான சகாக்கள் இருந்தனர். அவர்கள் ஜானின் கரங்கள் மாதிரி.
ருடோல்ப் அவர்களில் ஒருவரை தலைவராக நியமிக்க நினைத்தார்.
ரால்ப் அல்லது பிலிப்பை தலைவராக நியமிக்கலாம் அரசே.
மைக்கல் அவர்கள் பெயரைசொன்னதன் காரணம் ரால்ப் அவருடைய உறவினர். அதனால் அவரை தலைவராக்க எண்ணினார்.


இவர்களில் சாமர்த்தியசாலி யார் என்று எப்படி கண்டு பிடிப்பது?
அரசே, துப்பறியும் வேலை அபாயங்களை கொண்டது. அவர்கள் எப்போது வேண்டு மானாலும் கைது செய்ய படலாம். அவர்கள் புத்திசாலியாக இருந்தால் சிறை செல்லாமல் தப்பிக்கலாம்.
நாம் திடீரென ரால்ப் பிலிப் இருவரையும் கைது செய்வோம். யார் சிறையில் இருந்து வெளி வருகிறார்களோ அவர்களை தலைவராக்கலாம்.
சரி. அவர்களை கைது செய்ய உத்தரவிடுகிறேன்
மைக்கல் நிச்சயமாக ரால்ப் தப்பிக்க ஏதோ திட்டம் திட்டம் தீட்டியுள்ளான் என ருடோல்ப் நினைத்தார்.


ருடோல்ப் தனது ஒரு நம்பிக்கையான பணியாளரை மைக்கல் பின் அனுப்பி வைத்தார்.
கவனமாக பார்த்து மைக்கல் எங்கு செல்கிறான் என்ன செய்கிறான் என்று சொல்.
மைக்கல் தனது இடத்திற்கு செல்வதற்கு முன் ரால்ப் வீட்டிற்கு சென்றான்.
சில நேரம் கழித்து ரால்ப் வெளியே வந்தான். வந்தவுடன் அந்த குறிகளை கண்டு தான் கைது செய்யப்படப் போவதை கண்டு பிடித்தான்.
என்னை கைது செய்ய யாரோ உத்தரவிட் டுள்ளார்கள். நான் தயாராக இருக்க வேண்டும்.


அடுத்த நாள் ரால்ப் பிலிப் இருவரையும் அழைத்தனர்.
நீங்கள் கைது செய்யப்பட்டுள்ளீர்கள். உங்களில் யார் சிறையை விட்டு முதலில் வருகிறாரோ அவர் தான் துப்பறியும் தலைவராக நியமிக்க படுவார்.
ரால்ப் முன்கூட்டியே தெரிந்திருந்ததால், சிறையை விட்டு தப்பிக்க தேவையான சாதனங்களை உடன் வைத்திருந்தான்.
அரசே, நாங்கள் ரால்ப் பிலிப் இருவரையும் கைது செய்து விட்டோம்.
அந்த நேரத்தில் பிலிப் நுழைகிறான். மைக்கல் ஆச்சரியப்பட்டான்.
நீ இங்கு எப்படி? சிறிது நேரத்திற்கு முன்பு தானே நீ கைது செய்ய பட்டாய்? எப்படி அதற்குள் வெளியே வர முடிந்தது?


நான் ரால்ப் வீட்டின் வாசலில் தானே கோடு போட்டேன்.
என் வீட்டிற்கு வெளியே இரண்டு குறுக்கீடிடப்பட்ட கோடுகள் இருந்தது. நான் கைது செய்யப்படப் போவதை அறிந்து கொண்டேன்.
நீ ரால்ப் வீட்டின் வெளியே கோடு போட்டதனால் நாங்கள் பிலிப் வீட்டின் வாசலில் போட்டோம். போட்டி என்பது பாகுபாடின்றி இருக்க வேண்டும் அல்லவா?
அரசே. நான் சிறையின் உள்ளே செல்லவே இல்லை. நான் கைது செய்ய பட போவதை அறிந்து நான் என்னிடத்தில் வேறொரு மனிதனை அனுப்பி வைத்தேன்.
நீ சிறையை விட்டு எப்படி வெளியே வந்தாய்?
ரால்ப் குறிப்பு பெற்ற பின்பும் தப்பிக்கவே திட்டமிட்டான். ஆனால் பிலிப்போ கைதாகாமல் தவிர்த்துவிட்டான். ருடோல்ப் பிலிப்பை தலைவராக நியமித்தார். மைக்கல் தனது பாடத்தை கற்று கொண்டார்.
முற்றும்


உண்மையான அர்த்தம்


ஒரு விவசாயி அவரது கடின உழைப்பு மூலம் ஒழுக்கமான பணம் சம்பாதித்து கொண்டிருந்தார்.
அவருக்கு வயதானதால் உடல் நிலை மிக மோசமாக இருந்தது. ஆகவே ஒரு நாள் அவர் தன் இரண்டு மகன்களை அழைத்து அவர்கள் மத்தியில் தனது சொத்தை பிரித்தார்.
என் தந்தை எனக்கு மூன்று அறிவுரைகளை வழங்கினார். அதன் மூலம் தான் சொத்துக்கள் சம்பாதித்தேன்.
எங்களுக்கு தயவு செய்து சொல்லுங்கள். நாங்களும் பின் பற்றுவோம்.
முதல் அறிவுரை சுவையான உணவருந்து, இரண்டாவது நிம்மதியாக தூங்கு, மூன்றாவது எங்கு சென்றாலும் நண்பர்களை கூட்டி செல்.


சில நாட்களுக்கு பிறகு, அந்த விவசாயி இறந்தார்.
இரு மகன்களும் சொத்துகளை பார்த்து கொண்டனர்.
சில மாதங்களுக்குப் பிறகு, இளைய மகன் தனது பங்கை விற்று விட்டான். அவன் எதுவும்
செய்யவில்லை. முழு நாளும், சாப்பிட்டு, தூங்கி, குடும்பம் மற்றும் நண்பர்களுடன் சந்தோஷமாக இருந்தான்.
சில நாட்களுக்கு பிறகு, அவனுடைய
பணம் அனைத்தும் தீர்ந்தது.
ஆனால் அவனது மூத்த மகனின் சொத்தோ
நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே இருந்தது.


ஒரு நாள் இளைய மகன் மூத்தவனை வயலில் சந்தித்தான்.
நீ நமது தந்தை சொன்னதை மறந்து விட்டாய். என்ன செய்கிறாய்?
நீ தந்தை சொன்னதின் உண்மையான அர்த்தத்தை புரிந்து கொள்ள வில்லை. புரிந்திருந்தால், நீ இந்த நிலைமையில் இருக்க மாட்டாய்.
உனக்கு சரியாக புரிந்திருந்தால், என்னை ஏன் முன்பே எச்சரிக்கவில்லை?
நான் நிறைய முறை உனக்கு விளக்க முயற்சி செய்தேன். ஆனால் நீ உன் நண்பர்க ளுடன் இருந்தாய். நான் சொல்லி இருந்தாலும் உனக்கு புரிந்திருக்காது.


மன்னித்துவிடு. நான் தந்தை எங்கு சென்றாலும் நண்பர்களுடன் செல் என்றதால், எனது நண்பர்களுடன் இருந்தேன்.
நாம் விவசாயிகள். அவர் சொன்னது என்னவென்றால், நாம் எப்போதும் நம்முடன் ஒரு குச்சி எடுத்து செல்ல வேண்டும். அவர் நீ கெட்ட சகவாசத்துடன் இருக்க சொல்லவில்லை.
சாப்பிடு தூங்கு என்பதின் அர்த்தம் என்ன?
சுவையான உணவருந்து என்று அவர் சொன்னது எப்போது பசிக்கிறதோ அப்போது சாப்பிடு என்று. பசிக்கும் பொழுது உணவருந்தினால் உணவு சுவையாக இருக்கும் அல்லவா?


நிம்மதியாக தூங்கு என்றால்?
நிம்மதியாக தூங்கு என்றால் நாள் முழுதும் தூங்குவது இல்லை.
நமது தந்தையின் அறிவுரை எப்பொழுதும் கடினமாக உழைக்க வேண்டும். கடினமாக உழைத்தால் நிம்மதியான தூக்கம் வரும்.
இன்று நான் நமது தந்தையின் அறிவுரையின் உண்மையான அர்த்தத்தை அறிந்து கொண்டேன்.
இளய மகன் கடினமாக உழைக்க ஆரம்பித்தான். குறுகிய காலத்தில் நல்ல பணம் சம்பாதித்து சந்தோஷமாக வாழ்ந்தான்.
முடிவு.


குறைந்த மதிப்பு


கிசா ராஜ்யம் நைல் நதியின் கரையில் இருந்தது. அதை ஹோருஸ் என்ற கர்வமான மன்னர் ஆண்டு வந்தார்.
அவர் எப்போதும் தான் பிரபலமாக மற்றும் எகிப்தின் பெரிய அரசராக வேண்டும் என்று விரும்பினார்.
ஹோருஸ் ராஜ்யங்களை கைப்பற்றும் படலத்தில் இருந்தார்.
அரசி தன் கணவன் உடன் இல்லாததால் சந்தோஷமாக இல்லை. ஒரு நாள்..
நமக்கு இனி போர் வேண்டாம்...
உனக்கு போரை பற்றி என்ன தெரியும்? போர் என்பது வீரனின் அடையாளம்.
நீ மாளிகையில் இருந்து அனைத்து சுகங்களையும் அனுபவி. எனக்கு புத்தி சொல்லாதே.


அரசியின் ஆலோசனையை நிராகரித்து, அரசர் தன் படையுடன் இன்னொரு ராஜ்யத்தை தாக்கினார்.
ஆக்டேன்.. உனது வீரம் எனக்கு பிடித்திருக்கிறது.
யுத்தத்தில், தளபதி ஆக்டேன் துணிச்சலாக சண்டையிட்டு நிறைய எதிரி வீரர்களை வீழ்த்தினார்.
யுத்தத்தில் உனது வீரத்தை நான் கண்டேன். உனக்கு என்ன வேண்டுமோ கேள்.
அரசே, எனது ஆசை என் தாய்நாட்டிற்காக போரிடுவது தான். ஆனால் நீங்கள் இனிமேல் யுத்தத்திற்கு செல்ல வேண்டாம்.


ஏன் அப்படி சொல்கிறாய்?
அரசர் நாட்டு மக்களிடம் தேசபக்தி எதிர்பார்ப்பதை போல் ஒவ்வொரு மனைவியும் கணவனுடன், தாய் மகனுடன் வீட்டில் இருக்க ஆசை படுவார்கள்.
அரசே, தயவு செய்து சிறிது நேரம் ஒதுக்கி, மக்களுடனும் அரசியுடனும் உங்கள் நேரத்தை செலவழியுங்கள்.
அரசர் ஹோரூஸ் மிகவும் கோபம் கொண்டார்.
நாம் சண்டையிடுவதை விட சொல்கிறாயா?
ஆமாம் அரசே.. நாம் எல்லோருடனும் போரிட வேண்டாம். வீரர்களும் சோர்வாக உள்ளனர். அவர்களுக்கும் ஓய்வு தேவை. மேலும் அவர்கள் குடும்பத்துடன் நேரம் செலவழிக்க வேண்டும்.
உன்னை போல் துணிச்சலானவர்கள் போர் வேண்டாம் என்றால் மீதி பேர் என்ன சொல்வார்கள்?


அரசர் சில வீரர்களை அழைத்தார்.
நீங்கள் சண்டையிட விரும்புகிறீர்களா? இல்லை வீட்டில் இருக்கவா?
நாங்கள் சண்டையிட ஆசைப்படுகிறோம் அரசே.
பார்த்தாயா, அவர்கள் உன்னை போல் வீட்டில் இருக்க ஆசைப்படவில்லை.
ஆக்டேனால் அரசரை சமாதானப்படுத்த முடியவில்லை.
இந்த மாதிரி ஒரு யுத்தத்தில் அரசர் தனது கொட்டகையில் ஓய்வெடுத்து கொண்டிருந்தார். ஒரு கோமாளி உள்ளே நுழைகிறான்
யார் நீ?
எல்லோரும் என்னை கோமாளிகளின் ராஜா என அழைப்பார்கள்.


அரசே. நான் நீங்கள் கைப்பற்றிய இந்த ராஜ்ஜியத்தி லிருந்து வருகிறேன்.
அதனால்?
மன்னிக்க வேண்டும் அரசே, ஒரு நிமிடம் பொறுங்கள். நீங்கள் ஏன் தண்ணீர் அருந்துகிறீர்கள் என சொல்வீர்களா?
நான் தாகமாக இருப்பதால்
நீங்கள் தாகமாக இருக்கிறீர்கள் என வைத்து கொள்வோம். சுற்றிலும் நீரே இல்லை. நீங்கள் தண்ணீர் பெற எவ்வளவு பணம் தருவீர்கள்?


நான் வேறொரு நாட்டில் இருக்கிறேன். தண்ணீர் கிடைக்காததோ, விஷம் கலந்தாலோ ஆச்சர்ய படுவதற்கில்லை.
எனக்கு எனது தண்ணீரில் விஷம் கலந்திருப்பது தெரியவந்தால், நான் என்னிடம் இருக்கும் அனைத்தையும் என் ராஜ்யம் உட்பட விஷத்தை அகற்ற தந்து விடுவேன்.
அரசே, ஒரு துளி விஷமும், தண்ணீரும் உங்கள் ராஜ்யத்திற்கு சமம் என்றால், நீங்கள் இந்த சிறிய விஷயத்திற்காக ஏன் போரிடுகிரீர்கள்?
நான் மட்டுமல்ல. எனது மக்களும் இதைத் தான் விரும்புகிறார்கள்.
அரசே, உங்கள் கொட்டகையை வீரர்கள் காவல் இடுகிறார்கள்.


நான் உங்கள் வீரர்களுடன் பேசினேன். அவர்கள் சண்டையிட்டு சோர்வாக இருக்கிறார்கள். அவர்களுக்கு போர் வேண்டாம். அவர்களிடம் நான் உங்களை ஒப்புக்கொள்ள செய்வேன் என்று சொன்னதால் தான் என்னை உள்ளே அனுமதித்தார்கள்.
ஆனால், நான் அவர்களை கேட்ட போது போர் வேண்டுமென்று சொன்னார்களே.
அரசே, நீங்கள் உங்கள் தளபதியின் அறிவுரையை கேட்க மறுத்து விட்டீர்கள்? அப்படி இருக்கும்போது அவர்கள் எப்படி உண்மையை சொல்வார்கள்?
ஒரு சாதாரண வீரர் உங்களை எப்படி மறுக்க முடியும்? உங்களை சந்தோஷபடுத்தவே அவர்கள் போர் வேண்டும் என்று சொன்னார்கள்.
அரசர் கோமாளி சொல்ல நினைப்பதை புரிந்து கொண்டார்.
நன்றி. எனது தவறை உணர்ந்தேன்.
அரசர் ஹோரூஸ் தான் கைப்பற்றிய நாடுகளை திரும்ப கொடுத்தார். அவர் தன்னுடைய மக்கள் மற்றும் அரசியிடம் தனது நேரத்தை செலவழிக்க ஆரம்பித்தார்.
முற்றும்


நிலவின் விளைவு


அடல்பர்ட் என்ற ஒரு தத்துவவாதி இருந்தார். மக்கள் அவரின் ஆலோசனைக்காக அவரிடம் செல்வார்கள்
அடல்பர்ட் ஒரு நடமாடும் களஞ்சியம்.
உண்மை தான் ஆனால் உனக்கு தெரியுமா அவர் நிறைய சூதாடுவார்.
அடல்பர்டிடம் ஒரு கெட்ட பழக்கம் அவர் சூதாடுவதுதான். அதனால் அவர் அனைத்து சொத்தையும் இழந்தார்.
அடல்பர்ட் சூதாட்டத்தின் அடிமையானார்.இதனால் அவரால் ஒரு வேளை உணவுக்கு சம்பாதிப்பது கூட கடினமாக இருந்தது.
நான் டமஸ்கஸ் செல்கிறேன். என்னுடைய அதிர்ஷ்டம் ஒரு வேளை மாறலாம். நான் எனக்கு சாப்பிடத் தேவையான அளவு சம்பாதிக்க முடியுமோ.


அடல்பர்ட் தனது நல்ல நண்பன் ப்ளூடோ வசிக்கும் இடமான டமஸ்கஸ் சென்றார். ப்ளூடோ அரசருக்கு ஆலோசகராக இருந்தார்.
அடல்பர்ட் தனது கருத்துக்களை ப்ளூடோவிடம் சொல்கிறார்.
கவலைப்படாதே அடல்பர்ட், நான் உன்னை அரசரிடம் பரிந்துரைக்கிறேன்.
நன்றி. நான் கௌரவிக்கப்படுவேன்.
மறு நாள், ப்ளூடோ அடல்பர்டை அரசரின் வீட்டிற்கு அழைத்து சென்று அறிமுகப்படுத்தினார்.
அரசர் அடல்பர்டின் தத்துவ அறிவை கண்டு வியந்தார்.
அடல்பர்ட். நீ ஒரு முழு அகராதி.


நிச்சயமாக எனக்கு அவரது அறிவு பிடித்த அளவு உங்களுக்கும் பிடித்திருக்கும்.
எல்லோருக்கும் அவர் வாதம் பிடித்திருந்தது. ஆனாலும் ஒரு சிலர் பொறாமை கொண்டனர்.
நாம் இதற்கு முன் இவரை பார்த்ததில்லையே, இவர் எங்கிருந்து வந்திருக்கிறார் என்று கண்டு பிடிக்க வேண்டும்.
மறு நாள்..
அரசே.. அடல்பர்ட் சூதாட்டக்காரர். அவரை நம் அவையில் அறிமுக படுத்தினால் நமக்கு தான் அவமானம்.
அடுத்த நாள், இன்னொரு பொறாமை பிடித்த அரசவை உறுப்பினர் காவலர்களுக்கு தகவல் கொடுத்தார். அடல்பர்ட் சூதாடும் போது பிடிக்கப்பட்டார்.


ப்ளூடோ, நீ அடல்பர்ட் போன்ற நபரை நம் அரசவைக்கு அறிமுகப்படுத்தி தவறு செய்து விட்டாய். அடல்பர்டை உடனே சிறையில் அடையுங்கள்.
ப்ளூடோ இந்த செயலின் பின் யார் இருக்கிறார்கள் என அறிந்து கொண்டார். ஆனால் அமைதியாக இருந்தார்.
ப்ளூடோ அரசரை அவர் தோட்டத்தில் நடந்து கொண்டிருக்கும்போது சந்தித்தார்.
வா ப்ளூடோ
இருட்டி கொண்டிருந்தது, நிலவு வானத்தில் தோன்ற ஆரம்பித்தது.
அரசே நிலவிடம் களங்கம் இருக்கிறது, இயற்கை நன்றாக இல்லை, நிலவு சூரியன் மங்கும்போது சந்தோஷமாக இருக்கிறது. இருந்தாலும் நாம் அதை ரசிக்கிறோம்.


நீ சொல்வது சரி தான் ப்ளூடோ
அரசே, நிலவிடம் இருக்கும் ஒரு சிறந்த அம்சம் மற்ற குறைகளை மறைக்கிறது.
ஆமாம். அதனுடைய குளிர்ந்த தன்மை மற்றும் ஒளி நமக்கு பிடித்திருக்கிறது.
ஆமாம். நாம் முழு நிலாவை ரசிக்கிறோம்.
புத்திசாலிமற்றும்ஞானமுள்ளவர்கள் எப்போதும் மற்றவர்களிடம் இருக்கும் நல்ல குணங்களை பார்த்து அவர்களை அதற்கு பாராட்டுவார்கள். அவர்களின் கெட்ட குணங்களை கண்டுக்கொள்ளாமல் இருப்பார்கள்.
அரசர் ப்ளூடோ சொல்ல நினைப்பதை புரிந்து கொண்டார்.
அடுத்த நாள் அரசர் அடல்பர்டை விடுவித்து அரசவையில் நியமித்தார்.
முற்றும்




Buy Books & eBooks Online at www.indianvedicschool.com

**INDIAN VEDIC SCHOOL PVT LTD.**

Plot No: 29B, Laxmi Nilayam, Road No: 8, Film Nagar,
Jubilee Hills, Hyderabad - 500096, Telangana, India.
info@indianvedicschool.com